செய்தி வெளியீடு எண் :23 13.02.2020

**தேனி மாவட்டம்**

**படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல் :-**

*****

தேனி மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியார்துறை வேலை வாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு முகாம், தேனி, கொடுவிலார்பட்டி கம்மவார் சங்கம் பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் 15.02.2020 (சனிக்கிழமை) அன்று காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இம்முகாமில் சென்னை, கோயம்புத்தூர், திருப்பூர், மற்றும் மதுரை, போன்ற பெருநகரங்களிலிருந்து டெக்ஸ்டைல்ஸ், ரெடிமேட் கார்மெண்ட்ஸ், மோட்டார் உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் கட்டுமானத்துறை சார்ந்த நிறுவனங்கள் கலந்து கொண்டு தகுதியுடைய இளைஞர்களை (ஆண்/பெண்) தேர்வு செய்து வேலை வாய்ப்புகள் வழங்கவுள்ளனர்..

மேலும், இம்முகாமில் 18 முதல் 45 வயதுக்குட்பட்ட 5-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை படித்தவர்கள் மற்றும் பட்டயப்படிப்பு (Diploma), பட்டப்படிப்பு (Degree) ஐ.டி.ஐ.(ITI), படித்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம். இம்முகாமின் மூலம் தகுதியான இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவரவர் தகுதிக்கேற்ப தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

எனவே, தேனி மாவட்டத்திற்குட்பட்ட கிராம மற்றும் நகராட்சி / பேரூராட்சிப் பகுதிகளைச் சார்ந்த இளைஞர்கள் (ஆண்/பெண்) கொள்பவர்கள் தங்களின் கல்விச்சான்று, குடும்ப அட்டை, ஆதார் அட்டை (அசல் மற்றும் நகல்கள்) மற்றும் 2 பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள் ஆகியவற்றுடன் கலந்து கொண்டு பயனடையுமாறு தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**